# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 12.4.2012

இந்தியாவிலேயே விரைந்து நகர்மயம் ஆகி வளர்ந்து வரும் மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் திகழ்ந்து வருகிறது. நகரங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் வலு சேர்க்கும் இயந்திரங்கள் ஆகும். அதே நேரத்தில், நகர்ப்புரங்களில் மக்கள் தொகை பெருகிவருவதன் காரணமாக, அடிப்படை வசதிகளின் தேவைகள் அதிகரித்து வருகின்றன. இதனை நிறைவு செய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

இந்த அடிப்படையில், சென்னை மற்றும் அதனைச் சார்ந்த புற நகர் பகுதிகளுக்காக "சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம்" மற்றும் இதர மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கு கூடுதல் நிதி வழங்கும் "ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்" என்ற இரண்டு மாபெரும் புதிய திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகின்றது.

இதன்படி 2011-2012–ம் ஆண்டில் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்திற்கு 500 கோடி ரூபாயும், ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்திற்கு 750 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்விரு திட்டங்களின் கீழ் சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் வழங்கல், பாதாள சாக்கடை, மழைநீர் வடிகால், மற்றும் சுகாதாரப் பணிகள், திடக்கழிவு மேலாண்மை, பேருந்து நிலையங்களின் மேம்பாடு, வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகிய அடிப்படை கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட பணிகள் நடைமுறையில் உள்ள திட்டங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுகின்றன. இதேபோல, 2012-2013–ம் ஆண்டிற்கும், சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்திற்கு 500 கோடி ரூபாயும், ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்திற்கு 750 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை நகரம் தமிழ்நாட்டின் பழம்பெரும் நகரங்களில் ஒன்றாகும். இது வரலாற்று பராம்பரியமும், சிறப்பும் கொண்ட ஒரு நகரம் ஆகும். புதுக்கோட்டை மாவட்டம் 1974-ஆம் ஆண்டு புதிய மாவட்டமாக மலர்ந்தது. ஆனால் அதற்கு 62 ஆண்டுகளுக்கு முன்னரே புதுக்கோட்டை நகராட்சி உருவாக்கப்பட்டது. 1912-ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட புதுக்கோட்டை நகராட்சி 100 ஆண்டுகளை இந்த ஆண்டு நிறைவு செய்திருக்கிறது.

10.82 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் தோற்றுவிக்கப்பட்ட இந்நகராட்சி தற்போது புதுக்கோட்டை ஊராட்சிப் பகுதி முழுவதுமாக இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டு 21.95 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாக உயர்ந்துள்ளது. எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதன் காரணமாக, 42 வார்டுகளாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள புதுக்கோட்டை நகராட்சியில் தற்போது 180 கி.மீ. நீளமுள்ள சாலைகள், 6355 தெரு விளக்குகள், 2 பூங்காக்கள், ஒரு பேருந்து நிலையம், 43 பள்ளிக் கட்டடங்கள் மற்றும் பிற அலுவலக கட்டடங்கள், 10 நீர்த் தேக்கத் தொட்டிகள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளன.

இந்நகரத்திற்கான பாதாள சாக்கடைத் திட்டம் அமைத்திட எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் அதாவது 7.2.2006–ல் ஆணையிடப்பட்டது. தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்–3-ன்கீழ் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் 30.6.2012–ல் நிறைவு பெற்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

புதுக்கோட்டை நகராட்சிப் பகுதிகளில் சாலை அமைத்தல், மழைநீர் வடிகால்கள் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் குடிநீர் பணிகள் முதலான பல்வேறு பணிகளை மேற்கொள்ள 2011-12-ம் ஆண்டில், ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம் மற்றும் இதர திட்டங்களின் கீழ் கட்டமைப்பு வசதிகளுக்காக 16 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை நகராட்சி 100 ஆண்டுகள் நிறைவு செய்யும் இந்த ஆண்டில், நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும் என புதுக்கோட்டை நகர்மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மேலும், நூற்றாண்டு விழா காணும் இத்தருணத்தில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்பாடு செய்திட அரசிடம் நிதி உதவி கோரி, புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் கடிதம் அனுப்பியுள்ளார்.

புதுக்கோட்டை நகராட்சி நூறாண்டுகள் நிறைவு செய்துள்ளது என்பது பெருமைக்குரிய வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். இதனை நினைவுகூரும் வகையில், புதுக்கோட்டை நகராட்சியின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக சிறப்பு உதவித் தொகையாக 50 கோடி ரூபாய் வழங்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், நூறாண்டுகள் நிறைவு செய்துள்ளதையொட்டி, நூற்றாண்டு விழா நினைவுத் தூண் மற்றும் நூற்றாண்டு விழா வளைவுகள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

*******